Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of

# கணிதம்

தரம் 10

வாரம் 40

**அலகு : மீடிறன் பரம்பல்**

**மாணவர் செய்ய வேண்டிய செயற்பாடுகள் :**

- ஒரு குறித்த நீர்ச் செயற்றிட்டத்தின் மூலம் நீரைப் பெறும் 70 குடும்பங்கள் ஒரு மாதத்தில் நுகர்ந்த நீர் அலகுகளின் எண்ணிக்கைகள் பற்றிய தரவுகள் பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றன.

| வகுப்பாயிடை | 12 - 14 | 15 - 17 | 18 - 20 | 21 - 23 | 24 - 26 | 27 - 29 |
|---|---|---|---|---|---|---|
| குடும்பங்களின் எண்ணிக்கை | 5 | 9 | 11 | 26 | 11 | 8 |

- ஒரு குடும்பம் பயன்படுத்திய நீரின் இடை அலகுகளின் எண்ணிக்கையைக் கிட்டிய முழு எண்ணிற்குக் கணிக்குக.
- முதலில் ஒவ்வொரு வகுப்பாயிடையையும் வகைகுறிப்பதற்கு நடுப்பெறுமானத்தைக் காண்க.
- வகுப்பாயிடை 21 – 23 இன் நடுப்பெறுமானமாகிய 22 ஐ இடையாக எடுத்துக் கொள்க.
- இப்போது ஒவ்வொரு நடுப்பெறுமானத்திலிருந்தும் எடுகொண்ட இடையைக் கழிக்க.
- கழிக்கும்போது கிடைக்கும் பெறுமானத்தை விலகல் எனக் கொள்க.
  (விலகல் = நடுப்பெறுமானம் - எடுகொண்ட இடை)

| வகுப்பாயிடை | நடுப்பெறுமானம் $x$ | விலகல் $d$ | மீடிறன் $f$ | $fd$ |
|---|---|---|---|---|
| 12 - 14 | 13 | −9 | 5 | −45 |
| 15 - 17 | 16 | −6 | 9 | −54 |
| 18 - 20 | 19 | −3 | 11 | −33 |
| 21 - 23 | 22 | 0 | 26 | 0 |
| 24 - 26 | 25 | 3 | 11 | 33 |
| 27 - 29 | 28 | 6 | 8 | 48 |
| | | | $\Sigma f = 70$ | $\Sigma fd = 81 - 132$<br>$= -51$ |

- இடை = எடுகொண்ட இடை + விலகல் இடை எனும் சமன்பாட்டின் மூலம் இடையைக் கணிக்க.

**மேற்படி செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தக்கூடிய புத்தகங்கள், Website, LMS பாடம் கற்றல் உபகரணங்கள் :**

ethaksalawa : https://youtu.be/aufGEmYmaDk

**Youtube :** **https://www.youtube.com/watch?v=gydIEiz45Fc**

**https://www.youtube.com/watch?v=WtWNWI_t8QU**

**மேலதிக புத்தகங்கள் / சஞ்சிகைகள் :**

**இப்பாடம் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய கற்றற்பேறுகள் :**

- மீடிறன் பரம்பலொன்றின் வகுப்பு எல்லைகள், வரையறைகள், நடுப்பெறுமானம் ஆகியவற்றை இனங்காண்பார்.
- மீடிறன் பரம்பலொன்றின் வகுப்பு எல்லைகளுக்கும் வரையறைகளுக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்குவார்.
- மீடிறன் பரம்பலொன்றின் வகுப்பு எல்லைகள், வரையறைகள், நடுப்பெறுமானம் ஆகியவற்றைக் காண்பார்.